# பெரியாரை சீண்டும் ஆளுநருக்குப் பதிலடி
# ஆரியர் – திராவிடர் கற்பனையா?

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி பிராமண சங்கத்தின் தலைவராக இப்போது “அவதாரம்” எடுத்து நேரடியாகப் பெரியாரைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார். ஆரியரைப் பற்றி தவறான கருத்தை பெரியார் பரப்பினாராம். ஆரியர் திராவிடர் வெவ்வேறு இனம் என்றும் ஆரியர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தனர் என்றும் கடந்த 60 ஆண்டுகளாக திராவிடச் சித்தாந்தம் பேசுவோர் கற்பனைக் கதையை உருவாக்கிப் பரப்புகிறார்.**

**ஆரியர் வந்தேறிகள் என்று ஈ.வெ.ராமசாமி கருத்துத் திணிப்பு செய்தார் என்றும் வாய்க் கொழுப்புடன் பேசி உள்ளார். இந்த உளறல்களை கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய் விட்டது. பீகாரில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஆளுநரே உமக்கு வரலாறு ஏதாவது தெரியுமா?**

1. பார்ப்பனர்களே தங்களை ஆரியர்கள் என்று பெருமையுடன் அறிவித்துக் கொண்ட கதை தெரியுமா?

அவர்கள் ஆரிய சமாஜம் என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டார்களே அது உமக்குத் தெரியுமா?

அதன் நிறுவனர் தயானந்த சரசுவதி ஆரியர்களாகிய வேதமும் சமஸ்கிருதமும் இரண்டு கண்கள் என்று அறிவித்தது தெரியுமா? ஆரியர்களாகிய நாம் வேதக் காலத்துக்கு திரும்ப வேண்டும் என அறைகூவல் விடுத்தது தெரியுமா?

2. 1875ல் பிரம்ம ஞான சபை(தியாசபிக்கல் சொசைட்டி) என்ற அமைப்பை கர்னல் ஒல்கட் என்ற வெளிநாட்டுக்காரர் தொடங்கியது தெரியுமா? அதில் பார்ப்பனர்கள் அணி வகுத்தது தெரியுமா? அந்த சபையில் இருந்த பிராமணர்கள் ஆரிய வர்த்தத்தை சேர்ந்தவர்கள் என்று அறிவித்துக் கொண்டது தெரியுமா?

ஆரியர் ஆதி சங்கரை தென்னாட்டில் பிறந்ததற்காக “திராவிட சிசு” என்று பார்ப்பனர்கள் பெருமை கொண்டாடினார்களே, அது எந்த அடிப்படையில்?

**நாங்கள் ஆரியர்கள் என்று கோல்வாக்கரே கூறுகிறார்!**

**ஆளுநரின் தாய் சபையான ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு கருத்தியலை உருவாக்கிய கோல்வாக்கரே நாங்கள் ஆரியர்கள் என்று அறிவித்துள்ளார். ஆரிய இட்லர் சொன்ன அதே கருத்தை, ஆரிய கோல்வாக்கரும் கூறுகிறார். நம்முடைய மக்களின் மூலாதாரம் எது என்பது சரித்திர மேதைகளுக்கே தெரியவில்லை. ஒரு வழியில் நாம் அநாதிகள்; துவக்கம் இல்லாதவர்கள்; பெயர் இல்லாமல் வாழ்ந்திருக்கிறோம். நாம் நல்லவர்கள். நாம் அறிவுத்திறம் கொண்டவர்கள். இயற்கையின் விதிகளை அறிந்தவர்கள் நாம் தான். ஆன்மாவின் விதிகளை அறிந்தவர்களும் நாம்தான். மனிதனுக்கு எவை எவை நன்மை பயக்குமோ, அவற்றை எல்லாம், மனித சமூகம் நன்மை பெறுவதற்காக வாழ்க்கைக்குக் கொண்டு வந்தது நாம்தான்! அப்போது நம்மைத்தவிர, மற்றவர்கள் எல்லாம் இரண்டு கால் பிராணிகளாகத்தான் அறிவற்றவர்களாகவே இருந்தனர். எனவே தனிமைப்படுத்தி நமக்குப் பெயர் எதையும் அவர்கள் சூட்டவில்லை. சில நேரங்களில் நமது மக்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட நாம் ஆரியர்கள் – அதாவது அறிவுத் திறம் மிக்கவர்கள் என்று அழைக்கப்பட்டோம். நம்மைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மிலேச்சர்கள். (ஆதாரம்** Bunch of Thoughts).

இது ஆரியதிராவிட பார்வை தானே!

**ஆரியர்கள் அந்நியர்கள் வந்தேறிகள் என்று வரலாற்றுத் ஆய்வாளர்கள் கூறிய கருத்தை இதோ பட்டியலிடுகிறோம்.**

“தென்னிந்தியாவில் வசித்து வந்த ஆரியரல்லாதார்களையே குரங்குகள் என்றும், அசுரர்கள் என்றும் இராமாயணக்கதையில் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது.” **(ரோமேஷ் சந்திர தத்தர்** C .L.E.,I.C.S., **எழுதிய ‘புராதன இந்தியா’ 52 ஆவது பக்கம்).**

“திராவிடர்கள் தங்கள்மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும்போர் புரிய வேண்டியிருந்தது”. இந்த விஷயம் ரிக்




வேதத்திலேயே அநேக சுலோகங்களாக இருக்கின்றன. **(டாக்டர் ரோமேஷ் சந்திர மஜூம்தார்** M.A., **யின் ‘பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரிகமும் 22 ஆவது பக்கம்).**

“ஆரியன் என்கிற பதம் இந்தியாவின் புராதனக் குடிமக்களிடமிருந்து

தங்களைப் பிரித்துக் காட்டுவதற்காக ஆரியர் ஏற்படுத்திக் கொண்ட பதம்”.

“தஸ்யூக்கள் என்பது இந்தியப் புராதனக் குடி மக்களுக்கு அவர்கள் (ஆரியர்கள்) கொடுத்த பெயராகும்.”

**(1922 ஆம் வருடம் பிரசுரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் ‘பழைய இந்தியாவின் சரித்திரம்’ புத்தகம்).**

ஆரியரல்லாதவர்களை ரிக் வேதத்தில் தாசர் (சூத்திரர்)கள் என்றும், தஸ்யூக்கள், அசுரர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் இருந்து கொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக்வேதத்தில் பல இடங்களில் காணலாம். “இரு வகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும் அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைக்குக் காரணமாகும்.” **(டாக்டர் ராதாகுமுத முக்கர்ஜி எம்.ஏ, பி.எச்டி. எழுதிய, ‘இந்து நாகரிகம்’ புத்தகத்தில் 62 ஆவது பக்கம்).**

“தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென்கிழக்கிலும், இலங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியரல்லாத திராவிட மக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியாளர்களால் பேசப்படும் பாஷை” – **(சர் ஜேம்ஸ்மர்ரே எழுதிய இங்கிலீஷ் அகராதியின் பக்கம்).**

“ஆரியர்கள் தங்கள் மொழியை ஆரியரல்லாதாருக்குள் புகுத்த முயற்சித்து, முடியாமல் போனதால், ஆரியரல்லாதாருடைய பாஷைகளைக் கற்றுக் கொண்டு, அவர்களது நாகரிகத்தையும் பின்பற்ற வேண்டி வந்தன” **(பண்டர்காரின் கட்டுரைகள் வால்யூம் 3 பக்கம் 100).**

“தமிழர்கள், ஆரியர்களை வடவர், வட நாட்டார் என்று அழைத்தார்கள், ஏனெனில், ஆரியர்கள் வடக்கே இருந்து வந்தார்களானதால்” **–(டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார், எம்.ஏ. பி.எச்.டி, அவர்கள் எழுதிய ‘தென்னிந்தியாவும் ‘இந்தியக் கலையும்’ என்ற புத்தகத்தில் 3 ஆவது பக்கம்).**

‘இராமாயணத்தில் தென்னிந்தியா (திராவிட தேசம்) தஸ்யூக்கள் என்ற ராட்சதர்களுக்குச் சொந்தமாக இருந்தது. இவர்கள் (தென் இந்தியர்கள்) வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களைப் போலவே நாகரிகம் அடைந்தவர்களாய் இருந்தார்கள்.” **–(பி.டி.சீனிவாச அய்யங்கார் எழுதிய ‘இந்திய சரித்திரம், முதல் பாகம்’ புத்தகத்தில் 10ஆவது பக்கம்).**

ஆரியர்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களை, தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்கள்– தஸ்யூக்கள் என்றும், – தானவர்கள் என்றும், ராட்சதர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். “ஆரியக் கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில், ஆரியர்கள் திராவிடர் நாட்டில் சிறுகச் சிறுக நுழைந்து, ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்.”

**– (C.S. சீனிவாசாச்சாரி, M.A.,M.S., ராமசாமி அய்யங்கார் M.A., ஆகிய சரித்திரப் போதகர்கள் எழுதிய, ‘இந்திய சரித்திரம், முதல் பாகம்’ என்னும் (H.G.வெல்ஸ் எழுதிய உலகத்தின் சிறு சரித்திரம் புத்தகம் 105வது பக்கம்)**

“வட இந்தியாவில் இருந்த திராவிடக்கலை, நாகரிகம் முதலியவை யாவும்ஆரியர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால், தென்னிந்தியாவில் அவ்விதம் நடக்கவில்லை.” (தமிழ்ப் பேராசிரியர் K.N. சிவராஜபிள்ளை B.A., எழுதிய ‘பண்டைத் தமிழர்களின்வரலாறு’என்னும் புத்தகம் 4 ஆம் பக்கம்). ஆரியரல்லாத இந்த நாட்டுப் பழங்குடிமக்கள் ஆரியர்களால் காடுகளுக்குத் துரத்தப்பட்டார்கள். இதுவும் போதாதென்று அவர்களை இராட்சதர்கள், அசுரர்கள் என்றும், ஆரியர்களும் ஆரியப்புரோகிதர்களும் நூல் எழுதி வைத்தார்கள்.

ஆரியரல்லாதார்களுக்கு இவர்கள் ஆதியில் இட்ட தஸ்யூக், ஆரிய எதிரி என்ற பெயர்கள் தான் நாளடைவில் பிசாசு, பூதம், ராட்சதன் என்ற பெயர்களாக மாறிவிட்டன.” **– (சர் வில்லியம் வில்சன்ஹண்டர்** K.C.S.I.,C.I.E., M.A., L.L.D. **எழுதிய ‘இந்திய மக்களின் சரித்திரம்’ என்னும் நூலின் 41 ஆவது பக்கம்).**

இராமாயணமும், மகாபாரதமும் இந்தோ ஆரியர் காலத்தையும், அவர்களுடைய வெற்றிகளையும், உள்நாட்டுச் சண்டைகளையும் பற்றிக் கூறுவதாகும். இவைகள் உண்மையென்று நான் நம்பவேயில்லை. “பஞ்சதந்திரம்”, “அராபியன் நைட்” முதலிய கற்பனைக் கதைகளைப் போன்றவை என்பதே என் கருத்து.” **– (பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் எழுதியுள்ள “டிஸ்கவரி ஆஃப் இந்தியா”** (Discove rey of India) **பக்கம் 76-77).**

நன்றி
**புரட்சிப் பெரியார் முழக்கம்**
**வார இதழ்**
7.3.2025

---

## திருவாரூரில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு
# ரூ102.392 கோடி வங்கிக்கடன்!
## பூண்டி கே.கலைவாணன் பயனாளிகளுக்கு வழங்கினார்!

*திருவாரூர், மார்ச் 10 - முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் மகளிர் தினத்தை முன்னிட்டுபெண்களை போற்றும் வகையில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நேரடி வங்கிக் கடன் வழங்கிதுவக்கி வைத்த நிகழ்வினை தொடர்ந்து . திருவாரூர் மாவட்டம், காட்டூர் கலைஞர் கோட்டம் அஞ்சுகம் அம்மையார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழாவில் 1235 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.102.3924 கோடி வங்கிக்கடனுதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் மோனச் சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலை ஏற்றனர்.*

*அதனை தொடர்ந்து திருவாரூர் நகராட்சி வளாகத்தில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் நகர மன்ற உறுப்பினர்கள் நகராட்சி ஊழியர்கள் தூய்மை பணியாளர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கும்,சிறப்பாக பணியாற்றிவர்களையும் பாராட்டி பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்.*



முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளில் மார்ச் 1 ஆம் தேதி காணை அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தங்க மோதிரம் அணிவித்தார். அன்னியூர் அ.சிவா எம்.எல்.ஏ, ம.ஜெயசந்திரன், கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், என்.கலைச்செல்வி, காடுவெட்டி ஏழுமலை, சிவக்குமார், வீரராகவன், ஆர்.அகிலன், பழனி, என். ஆர்.சி.கருணாகரன், மதன், சிவகுமார், புனிதா அய்யனார், சக்கரவர்த்தி, சிவகுமார், நாராயணசாமி, சிவராமன், ஏழுமலை, சேட்டு, சரவணன், நெடுஞ்செழியன், கலையரசி, நிரோஷா மாரிமுத்து, கணேசன், கிருஷ்ணன், குமரன், பள்ளியந்தூர் சரவணன் , சக்கரவர்த்தி, தவமணி, மலையவன், குமரன், கலைமணி, ராகுல், கதிரவன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா மற்றும் மகளிர் தின விழாவை முன்னிட்டு, பண்ருட்டி நகர திமுக சார்பில் நகர அலுவலகத்தில் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில், பண்ருட்டி சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் செ.புஷ்பராஜ் கலந்து கொண்டு மகளிர்களுக்கு புடவைகள் உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன் கதிர்காமன், மணிவண்ணன் , ராஜா, ராமலிங்கம், கௌரி அன்பழகன், பிரபு , சீனிவாசன் , மகாலிங்கம், பாரி, சண்முகவள்ளி பழனி, முகமது அனிபா ,சோழன் அருள் கலைவாணி, மதியழகன், லோகநாதன், ஏழுமலை, முருகன், தயாளன். அம்சா. அல்லிமுத்து. கோபி சம்பத், ராஜா, பாலச்சந்தர், பார்த்திபன் ,ராஜா, முகமது ,விக்கி , மோகன் , இலக்கியா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்:
# இராணிப்பேட்டையில் நல உதவிகள் வழங்கி சிறப்புரை!
## அமைச்சர் ஆர்.காந்தி – திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

*இராணிப்பேட்டை, மார்ச் 10-*

*இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையம் அருகில் அமைச்சர் ஆர். காந்தி தலைமையில் நடைபெற்றது.*

*பி.பூங்கா வனம் நகர செயலாளர் முன்னிலை, ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஏ.வி. நந்தகுமார் டி.தில்லை கே.எம்.ஹிமாயூன்சி பெரிய சாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா நகர நிர்வாகிகள் தாமோதரன் , வையாபுரி,*

*ஏர்டெல் குமார் அமித், கிருஷ்ணன் ரமேஷ், கோபி கிருஷ்ணன், ஆனந்தராஜ் வரவேற்புரையாற்றினர்.*

*கழக கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி.சிவா கலந்து கொண்டு சிறப்பிபுரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல் ஈஸ்வரப்பன் எம்எல்ஏ., ஜி.கே.குழுமம் ,சந்தோஷ் காந்தி, தலைமை கழக பேச்சாளர் தஞ்சை கலைமணி பாரதி நகர மன்ற தலைவர் சுஜாதா வினோத் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி மாவட்ட துணை செயலாளர்கள் மு. சிவானந்தம் துரை மஸ்தான் குமுதா குமார் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு. கண்ணையன் அ. அசோகன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.ஜெயக்குமார் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் தொன்போஸ்கோ மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சிவா மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பி.யுவராஜா*

*மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் எல்லப்பன் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல் நகர மாணவரணி அமைப்பாளர் பாலாஜி*

*நகர தொண்டர் அணி அமைப்பாளர் உமேஷ் மற்றும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட நகர அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் கலந்து கொண்டனர் இதில் இறுதியாக நகர துணை செயலாளர் பரமேஸ்வரி நன்றி கூறினார்.*


தமிழ்நாடு அரசு
**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்**

**தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் 1997, சட்ட எண். 19, 2018**

- தமிழ்நாடு அரசின் அனுமதி பெற்ற அனைத்து மருத்துவமனைகள் / நோயறிதல் மையங்கள் (Clinics) போன்றவை தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் சட்டம் 1997–ன் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் இரண்டும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆயுத படைகளுக்கு சொந்தமான மற்றும் இயக்கப்படும் நிறுவனங்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- கீழ்காணும் ஆன்லைன் மூலம் மட்டுமே பதியப்பட வேண்டும். www.tncea.dmrhs.tn.gov.in
- பதிவு செய்யப்படாத மருத்துவ நிறுவனங்கள் மீது தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் – 1997–ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.
- போலி மருத்துவர்கள் தொடர்பாக புகார் அளிக்க tncea.dmrhs@gmail.com என்ற இணையதளம் மற்றும் 104 இலவச தொலைபேசி எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.
- W.P. (MD) NO. 20217 of 2019, நாள். 15.02.2020, W.P (MD) No. 14520/2023, நாள். 03.10.2024 நீதிமன்ற ஆணையின் படி, மருத்துவ படிப்பிற்கு கல்வி நிறுவனங்கள் முறையாக தமிழக அரசின் அனுமதி பெற்று தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.
- எனவே மாணவரின் பெற்றோர்களும் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா கல்வியினை பயில்விக்க வேண்டாம் என எச்சரிக்கப்படுகிறார்கள்.
- இத்தகைய கல்விகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலாது என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,**
**சென்னை - 600 006.**

செ.ம.தொ.இ./234/வரைகலை/2025




தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற உலக மகளிர் தின நிகழ்வில் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று ரூபாய் 50.66 கோடி கடன், நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர்,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார் (தென்காசி) ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலை குமார்(வாசுதேவநல்லூர்)தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,நகர்மன்ற தலைவர் சாதிர்,ஒன்றிய குழு தலைவர் ஷேக் அப்துல்லா உள்பட பலர் உள்ளனர்.